விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 20 வியாழக்கிழமை (04.01.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 16

ராம்கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் மாற்றம் செய்ய ஐ.தே.க.கோரிக்கை

இலங்கையில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் தெளிவாக இல்லை என்று அது பொதுக்களுக்கு பெரும் ஆபத்தாக உள்ளது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அடுத்த வாரம் நாடாளுமன்ற அனுமதிக்கு சட்டத்தைச் சமர்ப்பிக்கும் முன்னர் அதில் பல பகுதிகள் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று ரணில் குறிப்பிட்டுள்ளார். கடந்த டிசம்பர் 27 ஆம் திகதி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அந்த மாற்றங்கள், அமைப்புக்கள், பொதுமக்கள் மற்றும் ஐ.தே.க. உறுப்பினர்கள் முன் வைத்தவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடிதத்தில் முன்வைத்துள்ள சில மாற்றங்கள்; சட்டத்தின் 16 ஆவது சரத்து பாதுகாப்பு அதிகாரிகளுக்கு முழு அதிகாரத் தையும் வழங்குகிறது. இது மக்களின் அடிப்படை (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸார் இன்று இலங்கை வருகின்றனர்

(கொழும்பு)

தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் படுகொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஐந்து பேர் அடங்கிய ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸ் குழு இன்று இலங்கை வரவுள்ளது.


கொழும்பில் வைத்து சுட்டுக்கொலை செய்யப்பட்ட ரவிராஜ் தொடர்பான விசாரணைகளுக்காக ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸாரின் ஒத்துழைப்பு பெறுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்தார்.

ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய வெளி நாட்டு அமைச்சு மேற்கொண்ட துரித நடவடிக்கைகளை அடுத்தே ஐந்துபேர் அடங்கிய ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸார் இன்று இலங்கை வரவுள்ளனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அரசாங்கத்திற்கும் ஸ்கொட்லன்ட் (04 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழர்களை பாதிக்கும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடோம்

## தமிழக முதல்வரிடம் இந்தியப் பிரதமர் உறுதி



(சென்னை)

இலங்கை தமிழர்களை பாதிக்கும் எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடமாட்டோம் என்று தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதிக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்து கடிதம் எழுதியனுப்பியுள்ளார்.

இலங்கைப் பிரச்சினை குறித்து முதலமைச்சர் கருணாநிதி, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு சில நாட்களுக்கு முன்பு கடிதம் எழுதியிருந்தார் அதற்கு பிரதமர் மன்



# தமிழக முதல்வரிடம் இந்தியப் பிரதமர் உறுதி



(சென்னை)

இலங்கை தமிழர்களை பாதிக்கும் எந்த நடவடிக் கைகளிலும் ஈடுபடமாட்டோம் என்று தமிழ்நாடு முதல மைச்சர் கலைஞர் மு.கருணாநிதிக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்து கடிதம் எழுதியனுப்பி யுள்ளார்.

இலங்கைப் பிரச்சினை குறித்து முதலமைச்சர் கரு ணாநிதி, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு சில நாட்களுக்கு முன்பு கடிதம் எழுதியிருந்தார் அதற்கு பிரதமர் மன் மோகன் சிங் அனுப்பியுள்ள பதில் கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)



## வாகரை வடக்கில் விமானத்தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெருகல் வடக்கு பிரதேசத்தின் மீது நேற்று முற்பகல் பத்து மணியளவில் விமானப்படையினர் தாக்குதல் நடத்தியதாக தேசிய பாதுகாப்புத் ஊடக தகவல் (04 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில் வசிப்போரின் விபரங்கள் நேற்று முதல் பதிவு

(கொழும்பு)

கொழும்பு நகரில் வசிப்போரை பதிவு செய்யும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி வெள்ள வத்தையில் முதற்கட்ட நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர். இதன் கீழ் ஆண்கள் அவர்களின் வாகனங்கள் (04 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ முகாம் மீது வாகரையில் தாக்குதல்

(வாகரை)

வாகரை மேற்குப் பிரதேசத்தில் அமைந் துள்ள இராணுவ முகாம்கள் மீது மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள் ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் (04 ஆம் பக்கம் பார்க்க)

## புலோலியில் இளம் பெண் நேற்று சுட்டுக்கொலை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை புலோலியில் இளம் பெண் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல் லப்பட்டுள்ளார். நேற்றுக் காலை 6.30 மணி யளவில் வீட்டில் இருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்டவர் புலோலி வடக்கு வல்லி புரப் பரியாரியார் ஒழுங்கையிலுள்ள கணப திப்பிள்ளை கமலினி (வயது 30) என தெரி விக்கப்பட்டது.

இவரது சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் உற வினர்களிடம் கையளிக்கப்பட்டது. (எ-52)

## போரை நிறுத்தி மக்களை பாதுகாப்பதுடன் இருதரப்பும் பேச்சுக்களில் ஈடுபடவேண்டும்

### ஐக்கிய நாடுகள் சபை மீண்டும் வலியுறுத்தல்

(கொழும்பு)

மன்னார் இலுப்பைக்கடவையில் விமா னப் படையினர் நடத்திய குண்டுவீச்சுத் தாக் குதலில் 15 அப்பாவி பொதுமக்கள் கொல்லப் பட்டதை அடுத்து இரு தரப்பும் போரை நிறுத்தி பொதுமக்களை பாதுகாப்புடன், பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில் உள்ள மக்கள் அங்கு இடம்பெற்று வரும் போரினால் பெரும் துன் பத்தை அனுபவித்து வருகின்றனர். நேற்று முன்தினம் இடம் பெற்ற உயிரிழப்புக்கள் மிக வும் வருந்தத்தக்கது.

போரில் ஈடுபடும் இருதரப்புக்களும் சர்வ தேச விதிகளின் பிரகாரம் பொதுமக்களை பாதுகாக்கத் தவறியது கவலை தரும் விடயம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபி மானப் பணிகளுக்கான உதவி ஆணையா ளரும் அவசரகால உதவிப்பணிகளுக்கான இணைப்பாளருமான மகறீரா வல்ஸ்ரேம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடமேற்கு பகுதியான இலுப்பைக்கட வை என்ற (04 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் நடந்த கொடூரத் தாக்குதல் மன்னார் ஆஜர் ஜனாதிபதிக்குக் கடிதம்

மன்னார் இலுப்பைக்கடவையில் விமானப் படையினர் நடத்திய கொடூர வான் தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை கடிதம் அனுப்பியுள்ளார்.

அவர் அனுப்பிய கடிதத்தின் முழு விபரம்,

மன்னார் மாவட்டத்தில் மக்கள் வெளியேற்றப்படாத இடமான இலுப்பைக்கடவைக்கு அருகே படகுத்துறையில் ஜனவரி 2 ஆம்திகதி காலை 9.35 மணியளவில் வான் தாக்குதல் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் நாவாந்துறையிலிருந்து இடம்பெயர்ந்த 35 குடும்பங்கள் வசிக்கும் சிறு குடியிருப்பில் வேவுத் தகவல் தருவதாக சொல்லப்படும் ஒரு விமானத்தின் துணையுடன் மூன்று கிபீர் குண்டு வீசும் விமானங்கள் தாக்குதலை நடத்தின.

2007 ஜனவரி 2 ஆம் திகதி காலை 9.35 மணிக்கு விமானத் தாக்குதல் நடைபெற்றது. குண்டுகள் வீழ்ந்த 12 இடங்களை நான் பார்வையிட்டேன். அங்கு இரண்டு குண்டுகள் வெடிக்காத நிலையில் இருந்தன.

தாக்குதல் நடந்த இடம் கடற்கரையிலிருந்து 100 மீற்றர் சுற்றுவட்டாரத்துக்குள்ளேயே உள்ளது. இந்த குடியிருப்பில் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள 35 கத்தோலிக்க மீன்பிடிக் குடும்பங்கள் வசித்து வந்தன.

அந்த இடத்தில் ஒரு கத்தோலிக்க தேவாலயம் இருந்தது மிகத் தெளிவாகத் தெரியும். அவர்கள் மிகச் சிறிய குடிசைகளில் வசித்து வந்தனர்.

இந்தப் பகுதியின் அருட் தந்தை பி.அருள்நாதன் மற்றும் இந்தப் பகுதியில் பணியாற்றும் பெரும்பாலான அருட் தந்தையர்களுக்கும் சமயத் தொண்டர்களும் இந்த இடமும் இங்கு வாழ்ந்த மக்களும் மிகவும் பரிச்சயமானவர்கள்.

இந்த இடத்தை நான் நண்பகல் 12.45 மணிக்குச் சென்று பார்வையிட்டேன். சுமார் 15 நிமிடம் கழித்து அனைத்துலக செஞ்சிலுவைச் சங்க ஊழியர்கள் அங்கு வந்து சேர்ந்தனர்.

இந்தப் பகுதி மக்கள், அருட் தந்தை, சமயத் தொண்டர்களிடம் பேசியதிலிருந்தும் எனது நேரடி அவதானிப்பிலிருந்தும் இந்தப் பகுதியிலோ அதன் சுற்றுப் புறத்திலோ விடுதலைப்புலிகளின் இராணுவப் பதுங்கு குழிகளோ அல்லது அவர்களது முகாம்களோ அல்லது விடுதலைப்புலிகள் எனக் கருதக்கூடிய தனிப்பட்டவர் தங்கும் வசிப்பிடங்கள் இல்லை என்பதை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

பொதுமக்கள் வசிப்பிடத்தைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது மிகத் தெளிவாக உள்ளது. நான் பார்த்த வரையில் 13 அப்பாவிப் பொதுமக்கள் புத்தாண்டின் முதல் நாளில் துண்டு துண்டுகளாகச் சிதறியுள்ளனர். மேலும் காயமடைந்தவர்களில் பலர் உயிரிழக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

இந்தப் பகுதியின் கத்தோலிக்க அருட் தந்தையரின் முன்னிலையில் எட்டுப் பொதுமக்களின் உடல்களை பள்ளமடு மருத்துவமனையில் பார்வையிட்டேன். இதில் மூவர் 2,6,11 வயதுடைய சிறார்கள். அவர்கள் அனைவரது உடல்களும் சிதைந்திருந்தன. மூவரது தலைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்தன.

எனக்குத் தெரிந்தவரையில் தனது மாமியாரைப் பார்க்க விடுமுறையில் சாதாரண உடையில் வந்திருந்த ஒரு விடுதலைப்புலி வீரரைத் தவிர வேறு எவரும் இந்தச் சம்பவத்தில் கொல்லப்படவில்லை என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

## இரு பெண்கள் ஹற்றனில் கைது

(மவுஸாகல)

மஸ்கரிய மவுஸாகல நீர்த் தேக்கத்தில் நிழற்படம் எடுத்த இரு பெண்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். மவுஸாகல நீர்த் தேக்கப் பிரதேசம் அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அதனை நிழற்படம் எடுத்த தாயும் மகளுமே கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பத்தில் வசித்து வந்தவர்கள் என்றும் தற்போது கொழும்பில் தங்கியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் ஹற்றன் நீதிவானின் நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டுள்ளனர். (எ-9)

## தொடர்பு கொள்ள கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளிலிருந்து அதிபர் மற்றும் உப அதிபர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் நிலையில் கொழும்பு செல்ல முடியாதிருப்போர் உடனடியாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

நேரிலோ வந்தோ அல்லது 222 9824 எனும் தொலைபேசி இலக்கத்தினூடோ அமைச்சருடன் தொடர்பு கொள்ள முடியும் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சுத் தெரிவித்துள்ளது. (எ)

## விமானக் குண்டு வீச்சில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த இருவர் மரணம்

மன்னார் படகுத்துறைக் குடியேற்றத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 27 பேரில் நேற்று முன்தினமும் நேற்றும் இருவர் மரணமாகியதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட வேளை நேற்று முன்தினமிரவு ஒருவயதுக் குழந்தை ஒன்று மரணமாகியதாகவும் நேற்று வயோதிபப் பெண் ஒருவர் மரணமாகியதாகவும் வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

எஞ்சிய 25 பேரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் இருவர் சிறார்கள். மேல் சிகிச்சைக்காக வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய தேவையுள்ள போதிலும் அவர்களை உடனடியாக அனுப்புவதற்கு இயலாது இருப்பதாக கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சதானந்தம் தெரிவித்தார்.

இந்தச் சிறுவர்களின் பெற்றோர்களோ அல்லது உறவினர்களோ எவரும் உடன் இல்லாதிருப்பதால் இந்தச் சிறுவர்களைப் பராமரிப்பதற்கு எவரும் இல்லாத நிலையில் மேல் சிகிச்சைக்காக அனுப்ப முடியாதிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (எ-1)

## வாகன உரிமையாளர் மீது துப்பாக்கிச் சூடு

புலோலி சந்தை வீதியில் வைத்து வாகன உரிமையாளர் ஒருவர் சுடப்பட்டுள்ளார். தலையில் பின்பகுதியிலும் இடுப்பிலும் படுகாயமடைந்த அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

குடத்தனையைச் சேர்ந்த காத்திகேசு கிருஷ்ணதாசன் (வயது-53) என்பவரே சுடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-52)

## வாள் வெட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் படுகாயம்

### கொக்குவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு அம்மன் வீதியில் உள்ள வீடொன்றில் புகுந்த திருடர்கள் அங்கிருந்த குடும்பஸ்தர் ஒருவரை வாளால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் குறிப்பிட்ட வீட்டினுள் நுழைந்த திருடர்கள் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட சமயம் வீட்டின் உரிமையாருக்கும் திருடர்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளதாகவும் அதன் போது குடும்பஸ்தர் வாள் வெட்டுக்கு இலக்கானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கமலநாதன் (வயது-56) என்பவரே காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-3)

## மகனைக் கடத்த முற்பட்டவேளை அதனைத் தடுத்த தந்தை சுடப்பட்டார்

### கொக்குவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் வராகை அம்மன் கோவிலடிப் பகுதியைச் சேர்ந்த ரவீந்திரன் (வயது-43) என்பவர் அடையாளம் தெரியாத ஆயுததாரிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. அவரது வீட்டிற்குச் சென்ற ஆயுததாரிகள் மகனைக் கடத்திச் செல்ல முயன்ற வேளையில் பிரஸ்தாப நபர் தடுத்தபோதே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் அவரது மகன் குறித்த ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-3)

## சதாம் தூக்கிலிட்டதைப் பார்த்த சிறுவன் அதே பாணியில் தூக்கிட்டுப் பரிதாப மரணம்

(பாக்தாத்)

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் தூக்கிலிடப்படும் காட்சியைத் தொலைக்காட்சியில் பார்த்த சிறுவன் தானும் அதே பாணியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பாகிஸ்தானில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

பாகிஸ்தானின் ரஹீம்யா மாவட்டத்தில் ஆலம்சீர் பரசாவின் வீடு உள்ளது. இவருக்கு ஒரு மகளும் மகனும் உள்ளனர். இவருடைய மூத்த மகனான முபாஷா அலியே உயிரிழந்தவராவார்.

சம்பவ தினமான ஞாயிற்றுக்கிழமை சிறுவன் முபாஷா அலி தனது தங்கையுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அவனுடைய பெற்றோர் மற்றைய அறையில் இருந்துள்ளனர்.

அன்று சதாம் தூக்கிலிடப்பட்ட காட்சி தொடர்ச்சியாக தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. இதனை பார்த்த சிறுவன் தானும் அதைப் போல் செய்ய எண்ணியுள்ளான்.

தனது தங்கையின் உதவியுடன் மின் விசிறியில் கயிற்றை மாட்டிய சிறுவன் விபரீதத்தை அறியாமல் சுருக்கிட்டுத் தொங்கினான்.

தூக்கில் தொங்கிய சிறுவன் எழுப்பிய அபயக்குரல் கேட்டு பெற்றோர் ஓடி வருவதற்குள் சிறுவன் உயிரிழந்தான். கவனக் குறைவு காரணமாகவே இச்சோகச் சம்பவம் நடைபெற்றுள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார் இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்துள்ளதாகக் கூறியுள்ளனர். (எ-5)

## பொலித்தீன் பாவனைத் தடை மூன்று மாதங்களுக்கு வாபஸ்

### சுற்றாடல்துறை அமைச்சர் தெரிவிப்பு

பொலித்தீன் பாவனை தடைசெய்யப்பட்டதன் பின்னர் இதற்கு மாற்றீடுமேற்கொள்ளும் வரை மூன்று மாதங்களுக்கு அவகாசம் வழங்கப்படுவதாக சுற்றாடல் துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

20 மைரோன் மற்றும் அதற்குக் குறைந்த பொலித்தீன் பாவனை கடந்த திங்கட்கிழமை முதல் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாவனையாளர்கள் மாற்றுப் பாவனைப் பொருள்கள் இல்லாமை காரணமாக சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இதனையடுத்து பொலித்தீனுக்குப் பதிலாக மாற்று உபயோகம் அறிமுகப்படுத்தும் வரை அவகாசம் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பொலித்தீன் பாவனைக்கு தடை ஏற்பட்டுள்ள நிலையில் அதனை மீறுவோர் சட்டத்தால் தண்டிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸுடன் சந்திப்பு

யாழ்.குடாநாட்டில் இயங்கி வருகின்ற சன சமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சரது யாழ்.அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

பொது அமைப்புக்களைச் சார்ந்த 100ற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் தங்களது அமைப்புக்களின் செயற்பாடுகள், முன்னேற்றங்கள், அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு தேவைகள் தொடர்பில் தங்களது கோரிக்கைகளை முன்வைத்ததாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சுத் தெரிவித்துள்ளது. (எ)

## கொமிசியக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

யாழ்.மறை மாவட்ட புனித-மரியாயின் சேனையின் மாதாந்தக் கொமிசியக் கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மரியாயின் சேனையாளர்கள் தவறாது சமுகமளிக்கும்படி தலைவர் கேட்டுள்ளார். (ச-72)

சிறுவிளம்பரம்

திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், கமரா வகைகள், எலக்ரோனிக் பிளாஸ்கன் கண்ணாடி திருத்துதல் முதலிய வேலைகள் திறம்படச் செய்து கொடுக்கப்படும். *சு.நாராயணசாமி*, கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில் (மேல்மாடி) யாழ்ப்பாணம். (716)

ஆராய்ச்சியாலும் அனுபவத்தாலும் பகுத்தறிவாலும் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும்.

-இங்கர்சால்

வலம்புரி

# சிதம்பரத்தில் நடைபெறும் அறிவியல் மாநாடு

தமிழ்நாடு சிதம்பரத்திலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானிகள் ஒன்று கூடும் மிகப் பிரமாண்டமான அறிவியல் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

மாநாட்டினை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஆரம்பித்து வைத்துள்ளார். மாநாட்டில் இந்தியக் குடியரசுத் தலைவரும் அணுவிஞ்ஞானியுமான அப்துல்கலாம் கலந்து கொள்கின்றார்.

சுமார் எண்ணூறு விஞ்ஞானிகள் கலந்து கொள்ளும் இம் மாநாடு பற்றி இவ்விடத்தில் பிரஸ்தாபிப்பது இலங்கையின் நிலைப்பாட்டை அறிவதற்குப் பேருதவியாக அமையும்.

அண்டை நாடான இந்தியா உலக அரங்கில் வல்லாதிக்கம் பெற்ற நாடாகத் தன்னை வளர்த்து வருகின்றது.

பல்லினம்-பலமொழி-சமயப் பிரிவுகள்-கட்சி பேதங்கள் என்பவற்றை எல்லாம் கடந்து 'பாரத தேசம்' என்ற உயரிய இலக்குடன் அபிவிருத்திப் பாதையில் வீறு நடைபோடுகின்றது.

சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர் நாட்டின் பிரதமர், முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவர் நாட்டின் குடியரசுத் தலைவர், இத்தாலி தேசத்தைச் சேர்ந்த சோனியா காந்தி பாரதப் பெண்களின் பண்பாட்டைச் சுமந்தபடி காங்கிரஸின் தலைவியாக விளங்குகின்றார்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த ப.சிதம்பரம் நிதியமைச்சராகவும், மு.தயாநிதிமாறன் தகவல் தொழில்நுட்ப அமைச்சராகவும் இருக்க, இந்தியாவின் அறிவியல் உலகின் முதன்மையைப் பிடிப்பதற்காகப் பாடுபடுகின்றது.

ஆனால் இந்தியாவின் அண்டை நாடாக விளங்கும் இலங்கை மூவின மக்களை ஒரு குடைக்குள் வைத்திருக்க முடியாமல் தவண்டை அடிக்கின்றது. இலங்கை சிங்களவர்களுக்கு மட்டுமே உரியது. பௌத்தம் இலங்கையின் ஆட்சிக்குரிய மதம் என்ற அகங்காரப் பிடிக்குள் சிக்குண்டுள்ளது.

பிரதமர், ஜனாதிபதி என்ற பதவிகளை நாடு சுதந்திரம் பெற்று ஐம்பத்தெட்டு ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமிழ்-முஸ்லிம் இனத்தவர்கள் எட்டியும் பார்க்க முடியாதவாறு அரசியல் அமைப்புக்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு தலைவர்களும் சிறுபான்மை இனத்தவர்களின் வளர்ச்சியைத் தடுப்பதில்-அவர்களின் உரிமைகளை நசுக்குவதில் தமது சிந்தனா சக்தியை செலவிட்டார்களேயன்றி, அறிவியல் மாநாடு, விஞ்ஞானிகளின் ஒன்று கூடல், நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களின் வளர்ச்சி என்பன பற்றி சிந்தனைகள் மருந்துக்கும் இருக்கவில்லை.

அறிவியல் பற்றிய சிந்தனைகளை இலங்கை ஆட்சியாளர்கள் தமது இலக்காகக் கொண்டிருப்பார்களேயாயின், இலங்கை என்ற அழகிய நாடு இன்று உலகில் முதற்தர விஞ்ஞான அறிவியல் நாடாகத் திகழ்ந்திருக்கும்.

என்ன செய்வது? இனம், மதம் என்ற நினைப்போடு அரச குதிரையை ஓட்டியதன் விளைவு நாட்டின் பொருளாதாரம் -அபிவிருத்தி உள்ளிட்ட அனைத்துமே எதிர்க்கணியப் பெறுமானத்தின் பக்கத்தில் வீழ்ந்து போனது.

நூறுகோடி மக்கள் தொகையை கடந்து போயுள்ள இந்திய தேசத்தில் இன, மத ஒற்றுமைக்கு அங்குள்ள அறிவியல் வளர்ச்சியே முதன்மைக் காரணம் எனலாம்.

அதன் இன்னுமோர் ஒற்றுமைத் துலங்கலே சிதம்பரத்தில் நடைபெறும் அறிவியல் மாநாடாகும். இரண்டு கோடி மக்கள் தொகையை இலங்கையில் ஏ-9 பாதையை மூடிவிட்டு குடாநாட்டு மக்களை நலிவடையச் செய்யும் அரசாட்சியில், சிதம்பரம் மாநாட்டைப் பற்றி இலங்கை அரசு சிந்தித்துப் பார்ப்பது எதிர்கால இலங்கையின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் உதவுவதாக அமையும்.

# எந்தச் சவாலையும் எதிர்கொள்ள விடுதலைப்புலிகள் தயார் நிலையில்



## இளந்திரையன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

எதனையும் சந்திக்க தாங்கள் தயார் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

இராணுவத்தினரின் தாக்குதல்கள் அதிகரித்துள்ள வேளையில் எந்தச் சவாலையும் எவ்வளவு காலத்துக்குள்ளும் நாங்கள் எதிர்கொள்ளத் தயார் என்று விடுதலைப் புலிகள் அறைகூவல் விடுத்துள்ளனர்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வன்முறைகளில் புத்தாண்டின் முதல் இரண்டு நாட்களில் மட்டும் குறைந்தது 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜனவரி முதலாம் திகதி 10 கொலைகள் பதிவாகின. நேற்று முன்தினம் 15ற்கும் அதிகமானோர் மன்னாரில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். புத்தாண்டுக்கு முதல்நாள் அரசாங்கம் எங்களைப் போருக்குத் தள்ளுகின்றது என்ற எச்சரிக்கை விடுத்த விடுதலைப்புலிகள் எங்களது போராட்டத்திற்கு ஆதரவு தருமாறு அனைத்துலக சமூகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது. தமிழ் மக்கள் மீது போரைத் திணித்து தமிழர்களது சொந்த இடத்திலிருந்து அவர்களை முற்றாக ஒழித்துவிட நன்கு திட்டமிட்ட ஒரு செயற்பாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் இறங்கியுள்ளது.

இந்தச்சூழலில் அனைத்துலக சமூகத்தின் நடுநிலையான அறிக்கைகள் எதுவும் எதிர்பார்க்கும் விளைவுகளை ஏற்படுத்தாது என்று விடுதலைப்புலிகள் கூறியுள்ளனர். போர் அபாயத்துக்கு இடையிலும் புதிய ஆண்டில் நல்லதையே எதிர்பார்க்கின்றோம் என்று இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

(ச)

# புலிகள் வசம் ஹெலிகொப்டர்கள் இருப்பதால் செய்திகளை வெளியிடும் போது கவனம் தேவை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் வசம் ஒற்றை இயந்திரம் கொண்ட மூன்று ஹெலிகொப்டர்கள் இருப்பதனால் பாதுகாப்புத் தொடர்பான செய்திகளை வெளியிடுகின்ற போது தேசிய பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று பாதுகாப்பு விவகாரங்களுக்கான அரசாங்கப் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து பதிலளிக்கையில் மேலும் கூறியதாவது;

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கைது செய்யப்படவில்லை. ஆனால் அரசாங்கம் எதற்கும் தயாராகவேயிருக்கின்றது. செய்திகளை வெளியிடுகின்ற போது ஊடகவியலாளர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

ஊடகவியலாளர்கள் இரண்டு பக்கங்களும் பதுமாக இருக்கின்ற கத்திகளை போன்றவர்கள். நாட்டில் பயங்கரவாதச் செயற்பாடுகள் அதிகரித்துள்ள இந்த சூழ்நிலையில் செய்திகளை வெளியிடுவதில் அவதானம் தேவை.

உங்களுடைய செய்திகள் மூலம் புலிகள் பெற்றுக்கொள்கின்ற தகவல்களை விட அவர்களுக்கு கூடுதலான தகவல்கள் தெரியும். ஆனால் நீங்கள் வழங்குகின்ற செய்திகளின் மூலம் புலிகள் மேலும் தகவல்களைப் பெற்றுவிடக் கூடாது என்பதில் அரசாங்கம் அவதானமாக இருக்கின்றது.

பாராளுமன்றம், அலரிமாளிகை 50 வருடங்களுக்கு பழமை வாய்ந்த கட்டடங்கள் என்பதனால் புலிகள் தம் வசமுள்ள ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்தி குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ளலாம்.



அதற்காக புலிகள் 50 கிலோ நிறையுடை வெடி பொருள்களை எடுத்து வரலாம். ஆனால் நீங்கள் பங்கர் அமைப்பதாக செய் திகளை வெளியிட்டு பங்கரின் அளவுகளை வெளியிட்டால் புலிகள் 50 கிலோ வெடிபொருள்களுக்குப் பதிலாக 500 கிலோ வெடி பொருள்களை கொண்டு வருவார்கள்.

உண்மையில் பங்கர் அமைப்பது தொடர்பாக வெளி வந்த செய்தி அரசியலுக்கு நல்லதாக இருந்தாலும் தேசிய பாதுகாப்பிற்கு அது பங்கத்தை ஏற்படுத்தும். அதனால் பாதுகாப்புச் செய்தி விடயத்தில் கூடுதல் கவனம் தேவை.

இது எமது இதயப் பிரச்சினை. தலைவர் இல்லாத நாடொன்று உருவாக்கப்படவேண்டுமா? என்ற கேள்வியை நாமே எழுப்பிக் கொண்டு செய்தியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். கடந்த 25 வருடங்களில் பல தலைவர்களை இழந்து விட்டோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் கரு ஜெயசூர்ய, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி ஆகியோருக்கு கூடுதலான அச்சுறுத்தல்கள் இருக்கின்றன.

இராணுவத்தினர் வீதிச் சோதனைகளில் ஈடுபட்டிருக்கின்ற போது சில இலத்திரனியல் ஊடகங்கள் படையினர் குறித்த வீதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதனால் அவ் வீதியில் வாகனம் நெரிசல் காணப்படுவதாகவும் பொது மக்கள் மாற்று வீதியைப் பயன்படுத்துமாறும் செய்திகளை ஒலிபரப்புகின்றன. இது தேசியப் பாதுகாப்பிற்கு பங்கத்தை ஏற்படுத்தும் செயலாகும்.

(எ-5)

# வட.கிழக்கு இணைப்பு அரசியல் தீர்மானம் பிரிப்பானது நீதிமன்றத்தின் தீர்ப்பாகும்

## ஜயலத் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பிரிப்புத் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக் கொள்கின்றது. ஆனால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும்போது வடக்குக் கிழக்கு மாகாணம் இணைக்கப்பட வேண்டுமா? அல்லது பிரிக்கப்பட வேண்டுமா? என்பது தொடர்பாக முடிபெடுக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உண்டு.

வடக்குக் கிழக்கு இணைப்பானது அரசியல் தீர்மானமாகும். ஆனால் பிரிப்பானது நீதிமன்றத் தீர்ப்பாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில்அவர் மேற்கண்டவாறு கூறினார். இங்கு அவர் மேலும் கூறியதாவது;

நாடு பாரிய இக்கட்டான கட்டத்தில் இருக்கின்ற நிலையில் 2007 ஆம் ஆண்டில் நாம் காலடிஎடுத்து வைத்துள்ளோம். மிகவும் அவதானமான நிலையில் அச்சுறுத்தல்கள் மத்தியில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

வடக்கில் மக்கள் உணவு உட்பட அத்தியாவசிய பொருள்களின்றி திண்டாடிக்கொண்டிருக்கின்றனர். தென்னிந்தியாவுக்கு மக்கள் பாதுகாப்புத் தேடி சென்று கொண்டிருக்கின்றனர். வடக்கு மக்கள் தெற்கிற்கும் தெற்கு மக்கள் வடக்கிற்கும் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் தமிழ் வர்த்தகர்கள் கடத்தப்படுகின்றனர். சில சக்திகள் கப்பம் பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் என்றுமில்லாத அரசியல் நெருக்கடிக்குள் நாடு தள்ளப்பட்டுள்ளது.

ஆனால் வரலாற்றில் திருப்பம் ஏற்படும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திற்கு உடன்படிக்கையின் ஊடாக முழுமையான ஆதரவினை வழங்கி வருகின்றது.

யானைக்குட்டிகள் என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் விமர்சிக்கப்படுகின்றனர். எமது ஆதரவினை வைத்து எம்மை குறைகூற முயற்சிக்கப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி நாட்டை நேசிக்கின்ற அறிவுள்ள புத்திசாலியான யானைக்குட்டிகள் உள்ளன என்பதனை கூறிக் கொள்கின்றோம்.

வடக்குக் கிழக்கு பிரிப்புத் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக் கொள்கின்றது. ஆனால் நாட்டின் இனபப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் போது வடக்குக் கிழக்கு மாகாணம் தொடர்பாக விசேட தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வடக்குக் கிழக்கு இணைக்கப்பட வேண்டுமா? அல்லது பிரிக்கப்பட வேண்டுமா? என்பது தொடர்பாக முடிபெடுக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உண்டு. இது அரசியல் தீர்வுடன் இணைந்த விடயமாகும். நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் அரசாங்கம் இரண்டு மாகாணங்களைப் பிரித்து தேவையான நியமனத்தை வழங்குகின்றது.

(எ-5)

# வடக்கு கிழக்கு நிலைமை குறித்து புதிய ஐ.நா.செயலருக்கு கடிதம்

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி ஐக்கிய நாடுகள் செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் வாகரைப் பிரதேசத்தில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தாக்குதல்கள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் புதிய செயலாளர் டான்கீமூனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பிரதேசத்தில் அமைந்துள்ள வைத்தியசாலை இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வாகரை வைத்தியசாலை அமைந்துள்ள பிரதேசத்தை பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் செயலாளர் அழுத்தம் கொடுக்கவேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

ஏ-9 வீதி ,ஏ-15 வீதி என்பன திறக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ள அவர் ஏ-9 வீதி மூடப்பட்டதன் காரணமாக ஆறு இலட்சம் மக்கள் யாழ்ப்பாணத்தில் சிக்குண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மக்கள் போதிய சுகாதாரம் மற்றும் உணவு வசதிகள் இல்லாத நிலையில் உள்ளதாகவும் ஜெயானந்த மூர்த்தி ஐக்கிய நாடுகள் செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (ச-3)

# அதிக அளவில் இலங்கையர்களுக்கு கொரியாவில் வேலை வாய்ப்பு

இலங்கையர்களுக்கு ஒதுக்கியிருக்கும் வேலைவாய்ப்பு எண்ணிக்கையை கொரிய அரசாங்கம் அதிகரித்துள்ளது.

தொழில் மற்றும் தொழில் உறவு அமைச்சர் அதாவுட செனிவிரட்ணவை கொரிய நாட்டுப் பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் சந்தித்த போதே இந்த உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான இலங்கையர்கள் கொரிய நாட்டு தொழில் ஒப்பந்தங்களை சீரான முறையில் பின்பற்றுவதில்லை என்ற குற்றச்சாட்டு முன்னர் இருந்தது.

அதன் காரணமாக கொரியா ஏனைய நாட்டு பணியாளர்களை உள்வாங்குவது தொடர்பில் கவனம் செலுத்தியது. ஆனால் இப்போது அந்த நிலை மாறி எதிர்காலத்தில் இலங்கையர்கள் உரிய தொழில் ஒப்பந்தங்களை மீறமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் கொரிய நாடு உள்ளது.

இதன்காரணமாக பெருமளவு வேலை வாய்ப்புக்களை இலங்கையர்களுக்கு வழங்க கொரியா முன்வந்துள்ளது. (ச-3)

## வீரகேசரியின் தலைவர் காலமானார்

வீரகேசரி பத்திரிகையை வெளியிடும் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட் நிறுவன தலைவரும் பிரபல தொழிலதிபருமான தேசமான்ய எ.வை.எஸ்.ஞானம் நேற்று முன்தினம் இரவு காலமானார்.

சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் சிங்கப்பூரிலுள்ள மவுண்ட் எலிசபெத் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று முன்தினமிரவு 11 மணியளவில் இறையடி சேர்ந்தார். இறக்கும் பொழுது அவருக்கு வயது 84 ஆகும். (ச)

## போரை நிறுத்தி மக்களை...

கரையோரக் கிராமத்தில் விமானப்படையினர் நடத்திய கண்மூடித்தனமான குண்டு வீச்சில் இந்த உயிரிழப்புக்கள் இடம் பெற்றுள்ளன என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான பணிகளுக்கான இணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த குண்டு வீச்சில் பல இளைஞர்களும் கொல்லப்பட்டதுடன் 35 பொது மக்களும் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மோதல்கள் தொடங்கியதிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் இதுவரை இடம் பெற்ற இன மோதல்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையும் 67 ஆயிரமாக உயர்ந்துள்ளது.

நாடு முழுவதும் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். ஏறத்தாழ 213 ஆயிரம் மக்கள் கடந்த வருடம் மோதல்கள் தொடங் கயதிலிருந்து இடம் பெயர்ந்துள்ளனர்.

2004 ஆம் ஆண்டு இடம் பெற்ற ஆழிப் பேரலை பேரனர்த்தத்தின் போது இருதரப் பிடங்களை இழந்த 120 ஆயிரம் தொடக்கம் 140 ஆயிரம் மக்கள் தற்போதும் முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

முன்னர் நடந்த போர்களில் பாதிக்கப்பட்ட 315 ஆயிரம் மக்கள் தற்போதும் இடம்பெயர்ந்த நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். ஐக்கிய நாடுகள் சபை மீண்டும் ஒரு தடவை மோதல்களை நிறுத்தி அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி அரசையும் விடுதலைப் புலிகளையும் கேட்டுக்கொள்வதுடன் பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படியும் சர்வதேச மனித உரிமைகளையும் மனிதாபிமான சட்டங்களையும் பேணும்படியும் கேட்டுக்கொள்கிறது என்று ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான பணிகளுக்கான இணைப்பு அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களும் இடம் பெயர்ந்த மக்களும் வாழும் யாழ்.குடாநாடு பயங்கரமான சூழலில் உள்ளதாகவும் கடந்த ஓகஸ்டில் தரைவழிப்பாதை மூடப்பட்டதானது அங்கு உணவு,மருந்து மற்றும் பொது மக்களுக்கான அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதை தடுத்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஏ-1)

## வாகரை...

மையம் தெரிவித்துள்ளது.

இத் தாக்குதலின்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்த முகாமே அழிக்கப்பட்டதாக அந்த மையம் குறிப்பிட்டுள்ளது. (ச-3)

## இராணுவ...

தாக்குதலை தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

தாக்குதல்கள் காரணமாக இராணுவ வீரர்கள் 4 பேர் காயமடைந்தாகவும் அவர்கள் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (எ-9)

## கொழும்பு நகரில் வசிப்போரின்...

மற்றும் தேசிய அடையாள அட்டைகளின் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

பொலிஸாரின் இந்த நடவடிக்கைகளுக்காக வெள்ளவத்தைப் பிரதேசம் எட்டு வலயங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இதற்காக பொலிஸ் அதிகாரிகளும் மக்கள் தொடர்பு அதிகாரிகளும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக வெள்ளவத்தைப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை வெளியிடங்களில் இருந்து கொழும்புக்குச் செல்லும் அனைவரும் அவர்கள் தங்கி நிற்கும் பொலிஸ் பிரிவில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கூறப்பட்டது. (ச-9)

## ஸ்கொட்லன்ட் யார்ட்...

யார்ட் பொலிஸாருக்குமிடையே ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இன்று வருகை தருகின்ற ஸ்கொட்லன்ட் பொலிஸாரின் முதல் அணியினர் சிலவாரங்கள் மட்டும் இலங்கையில் தங்கியிருந்து விசாரணைகளை மேற்கொள்வார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இன்று வருகின்ற முதல் அணியினர் தங்களது ஆரம்பகட்ட விசாரணைகளை முடித்துக்கொண்டு நாடுதிரும்பியவுடன் மற்றுமொரு அணியினர் இலங்கை வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் நவம்பர் 10 ஆம் திகதி நாரஹேன் பிட்டியவிலுள்ள மாதா மாவத்தையில் வைத்து சுட்டுக்கொலை செய்யப்பட்டமை தெரிந்ததே. அச் சந்தர்ப்பத்தில் அவருடன் சென்ற மெய்ப் பாதுகாவலரும் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி பலியானமை தெரிந்ததே. (எ-5)

## பயங்கரவாதத் தடைச்...

உரிமைகள் பற்றிக் குறிப்பிடும் அரசியல் சட்டத்தின் 14 ஆவது பிரிவுக்கு எதிரானதாகும்.

9 ஆவது சரத்து பாதுகாப்பு அளவில் இருக்கிறது. பொதுமக்களுக்கு தேவையான செய்திகளை வழங்குவதில் இருந்து ஊடகத் துறையைத் தடைசெய்ய இந்த சரத்து வழி வகுக்கிறது. நீதிமன்றம். அரசாங்கத்துக்கு மேன்முறையீடு செய்யும் முறைகளை மாற் றியமைக்கும் 18 ,19,20 ஆவது சரத்துகளும் மிகப்பரந்த அளவில் உள்ளன.

இது பேச்சுச் சுதந்திரம், வெளியீடு போன்ற பொதுமக்களின் ஜனநாயக உரிமையை பாதிக்கும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஒருவரை தடுப்புக் காவலில் வைக்கும் உத்தரவுக்கு பிரதி பொலிஸ் மா அதிபர் கையெழுத்திட வேண்டும்.

அதிக அளவில் ஆட்கள் கடத்தப்படுவது குறித்தும் இக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது. இது குறித்து விசாரிக்க மூவர் அடங்கிய குழு அல்லது ஓர் அலுவலகம் அமைக்கப் படவேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டங்கள்,பயங்கரவா தத்தடைச்சட்டத்தில் மாற்றங்கள் என்று தலைப்பிடப்பட்டு எழுதப்பட்ட ரணிலின் கடிதம் ஜனா திபதியின் செயலாளரிடம் கடந்த வருடம் டிசம்பர் 28 ஆம் நாள் நேரில் கையளிக்கப்பட் டுள்ளது.ஆனால் இது நாள் வரை கடிதத்தைப் பெற்றுக்கொண்டது குறித்து எவ்வித பதிலை யும் மகிந்த அலுவலகம் ரணிலுக்குத் தெரிவிக்கவில்லை எனத் தகவல்கள் தெரிவிக் கின்றன. மாற்றங்கள் செய்யப்படாவிட்டால் ஜனவரி 9 ஆம் திகதி நடாளுமன்றக் கூட் டத்தில் இந்தச் சட்டத்துக்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவு வழங்காது என்று தெரிவித்துள்ளது. (எ-5)

## இலங்கைத் தமிழர்களை ...

முதல்வர் கருணாநிதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் மன்மோகன் சிங் கூறியிருப்பதாவது;இலங்கைப் பிரச்சினை குறித்து உங்கள் கவலையை நான் புரிந்து கொண்டேன். இலங்கையில் பொதுமக்கள் மீது குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது கட்ட விழ்த்து விடப்படும் வன்முறையினாலும்; இலங்கை தமிழ் மக்களின் துயர நிலை தொடர்பாகவும் இந்திய அரசு ஆழ்ந்த துயரத்தில் உள்ளது என்பதை உங்களிடம் மீண்டும் தெரிவிக்க இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

இலங்கை தமிழ்ச் சமுதாயத்தினர் சந்திக்கும் கஷ்ட நிலைமைகளை மேலும் அதிகரிக்க செய்யும் எந்த நடவடிக்கைகளிலும் நாங்கள் ஈடுபடமாட்டோம்.

இலங்கையில் உள்ள பிரச்சினைகளை அமைதியான பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்க முடியும் என்பது தான் தொடர்ந்து எங்கள் நிலை அப்பாவியாகவும்,பாதுகாப்பற்ற நிலையிலும் உள்ள பொதுமக்கள் மீது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் வன்முறைகளை கைவிட வேண்டும் என்று அனைவரையும் நாங்கள் வலியுறுத்துகிறோம் என்று அந்த கடிதத்தில் மன்மோகன் சிங் கூறியுள்ளார். (எ-5)


முதலாம் ஆண்டு நினைவில்

மலர்வு 17 - 07 - 1927

உதிர்வு 16 - 12 - 2005



அமரர் கணபதிப்பிள்ளை கணேசன்

உத்தம புத்திரனாய் உலகமதில் உதித்து
சித்தம் குளிர சோதரரை வாழவைத்து
அத்தனை பிள்ளைகளையும் ஆளாக்கி உயரவைத்து
சுற்றத்தவரைக் கூட சூழ இருந்து படிக்கவைத்து
மொத்தத்தில் பிறந்த பயனை அடைந்து விட்டு
அத்தனை உள்ளங்களிலும் ஆனந்தமாய் பவனி வந்த
எங்கள் குலவிளக்கே எம் தந்தையே, தெய்வமே
எமை விட்டு நீர் சென்று ஓராண்டு ஆனதய்யா
தங்கள் நினைவு எம்மைத் தடுமாற வைக்குதைய்யா
சிவாய நம என்று சிந்திக்கும் உங்கள் ஆத்மா
மார்கழித் திருவாதிரையில் சிதம்பரம் தான் சென்றதுவோ
சிவன் அவன் திருவடியில் நீங்கள் மலர்ந்திருக்க
அவன் அருள் மழையில் உங்கள் ஆத்மா சாந்திபெற
மனம் நெக்குருகி கண்ணீர் விழிகளுடன்
நினைக்கின்றோம் உங்கள் நீங்கா நினைவுகளை...
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

துன்னாலை மத்தி,
கரவெட்டி.

குடும்பத்தினர்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.01.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.